ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 9 ஜனவரி 2004 கானம் : 6


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 98 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 79 | 8 |
| 5. | மறக்க முடியாத நாள் | 10 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 69 | 14 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை -73 | 17 |
| 8. | ரஸமார்க்கம் | 19 |
| 9. | மாலே மணிவண்ணா - 16 | 21 |
| 10. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 (தொடர்ச்சி) | 23 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 100 | 25 |
| 12. | செய்திகள் | 28 |
| 13. | முக்கிய அறிவிப்பு | 31 |


தமிழ் புத்தாண்டு, சித்திரை மாதம் தான் பிறக்கின்றது என்றாலும், ஆங்கில புத்தாண்டுதினம் என்பது நமது அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கிய தினமாகிவிட்டது. இந்த புத்தாண்டில் அனைவரின் வாழ்வில் ஸகல மங்களங்களும் பெருக ப்ரார்த்தித்துக் கொள்கின்றோம். நம் மிஷன் சார்பில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : குந்தலவராளி தாளம் : ஆதி

*பல்லவி*

*ஜயஜய துளஸி ஜய வ்ரஜவாஸினி*
*ஸ்ரீக்ருஷ்ணசரண ப்ரியதாஸி (ஜய)*

*சரணங்கள்*

*தர்ஶனமாத்ரேண தாரித்ர்யவிநாஶினி*
*ஸ்பர்ஶனேன பாபவிநாஶினி (ஜய)*

*மங்களரூபிணி ஸுமங்களதாயினி*
*நிஷ்களங்க ப்ரேமதாயினி (ஜய)*

*ஆமலகவ்ருக்ஷ ப்ரியஸ்வாமினி*
*கோமளரூபிணி ப்ரியஜனபாலினி (ஜய)*

*ஆயுராரோக்ய அபிவர்த்தினி*
*ஆஶ்ரிதஜன க்லேஶவிநாஶினி (ஜய)*

*நித்யம் ஹரிஸாந்நித்ய ப்ரகாஶினி*
*ஸந்நிதிம் குரு தே ஸத்யஸ்வரூபிணி (ஜய)*

*முரளீதர ஹ்ருதய நிவாஸினி*
*ஸரள ஹ்ருதய ஸத்குணபூரணி (ஜய)*

*நாமாவளி*

*துளஸி மாம் பாஹி - க்ருஷ்ண*
*பக்திம் மே தேஹி (துளஸி)*

## 98

மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு கோடி அர்ச்சனை முடிவடைந்ததை ஒட்டி ஒரு உதய அஸ்தமன பாகவத ஸப்தாஹம் நடத்த வேண்டும் என்று நம்முடைய ஸ்வாமிஜி ஆசைப்பட்டார்கள். அதன்படி, மதுரபுரி ஆஸ்ரமத்தில் ப்ரும்மஸ்ரீ ஸ்ரீகாந்தசர்மா அவர்களால் ''ஸ்ரீமத்பாகவத உதய அஸ்தமன ஸப்தாஹம் நடைபெற்றது. இதையும் ''பாகவத ஸப்தாஹசதக்ரது'' என்றே சொல்லலாம். ஏன் என்றால், நூற்றுக்கும் மேற்பட்ட பாகவதர்கள் பாகவதத்தை வைத்துக்கொண்டு பாராயணத்தை சிரத்தையாக செய்தார்கள். தினமும், இரவு திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. ஸப்தாஹ பூர்த்தி நாள் அன்று ஸ்ரீ பிரேமிகவரதன் இந்த ஸப்தாஹத்தை ஏற்றுக்கொண்டதுபோல் மழை பெய்தது. அன்று, தர்மாத்மா ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களும் கலந்து கொண்டார்கள். அன்று இரவு மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன் கருடவாஹனத்தில் எழுந்தருளினார்கள். கேரள தேசத்தின் பஞ்சவாத்யம் கருடவாஹன புறப்பாட்டில் வாசிக்கப்பட்டது.

சென்னை மேற்கு மாம்பலம், அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் ஸ்ரீ ராம்ஸமாஜத்தின் பொன் விழாவை ஒட்டி இந்த ஒரு வருடம் முழுவதும் ஸத்கார்யங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு அங்கமாக நம் ஸ்வாமிஜியின் முன்னிலையில் ''ஸங்கீர்த்தன ஸப்தாஹம்'' நடைபெற்றது. அயோத்யா மண்டபத்தில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனும் எழுந்தருளி இருந்ததால், காலையில் ஸ்வாமிக்கு பிரபோதனமும், பூஜையும் இரவில் டோலோத்ஸவமும் நடைபெற்றது. தினமும் இரவு ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசமும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் கதாச்ரவணம் செய்தனர். தினமும் இரவு திவ்யநாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. இந்த ஸங்கீர்த்தன ஸப்தாஹத்தில் இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் பாகவதோத்தமர்கள் வந்து கலந்துகொண்டனர்.

பூர்த்தி நாள் அன்று சீதாகல்யாணம், வஸந்த கேளிக்கை மற்றும் பவ்வளிம்பு நடைபெற்றது. ஸ்ரீ ராம் ஸமாஜ் செயலாளர் ஸ்ரீராமன் அவர்களும், துணை செயலாளர் ஸ்ரீமதி கல்பனா ஐயர் அவர்களும், வெகு விமரிசையாக ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

அதை அடுத்து திருவண்ணாமலையில் பகவான் ஸ்ரீ யோகி ராம்சுரத்குமார் ஜயந்தி மஹோத்ஸவத்தில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியை, ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம டிரஸ்டி ஜஸ்டிஸ் ஸ்ரீ அருணாசலம் அவர்களும், மாதேவகி அம்மையாரும் பூர்ண கும்பத்துடன் வரவேற்றனர். அன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி ப்ரவசனம் செய்தார்கள்.

அதை அடுத்து, வேலூரில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருக்கோவிலிற்குச் சென்று அங்கு உரை நிகழ்த்தினார்கள். ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு கதா ச்ரவணம் செய்தனர். கதை கேட்க வந்ததோடு மட்டும் இல்லாமல் அத்தனை பேரும் நம் ஸ்வாமிஜியின் மேல் அத்தகைய அன்பைப் பொழிந்தனர். அவர்கள் தங்கள் அன்பினால் ஸ்ரீ ஸ்வாமிஜியை திக்குமுக்காடச் செய்தனர். அவர்களிடமிருந்து பிரிய முடியாமல் ஸ்ரீ ஸ்வாமிஜி சென்னை வந்து சேர்ந்தார்கள்.

GKR Charities, Mumbai & Chennai அறக்கட்டளை மூலமாக ‘திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணி திட்டம்’ என்ற திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் வசிக்கும் பகுதிகளில் நூற்றி எட்டு கோவில்கள் கட்டித் தர முடிவு செய்யப்பட்டு முதல் கோவில் ராஜகோபாலபுரத்தில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அந்த திட்டத்தின் இரண்டாவது கோவிலின் கும்பாபிஷேகம் மருத்தூர் என்ற கிராமத்தில் நடைபெற்றது. அந்த ஊரில் உள்ள எல்லோரும் பக்தியுடன் மஹாமந்திர கீர்த்தனை செய்தது ஆனந்தமாக இருந்தது.

கோயம்புத்தூரில் ராம் நகரில் உள்ள ராமர் கோவிலில் ***‘ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர் பிரவசன மண்டபத்தை’*** ஸ்ரீ ஸ்வாமிஜி திறந்து வைத்து கதா ச்ரவணத்தின் அவச்யத்தைப் பற்றி ப்ரவசனம் செய்தார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடி ஆனந்தித்தார்கள்.

ராம்நகர் பஜனை கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீ நாகசுப்ரமணியன் மற்றும் ஸ்ரீ க்ருஷ்ணன் அவர்கள் மிகவும் பிரம்மாண்டமாக விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

நீடாமங்கலம் என்ற ஊருக்கு அடுத்துள்ள பெரம்பூர் என்ற கிராமத்தில் பகவந்நாம போதேந்ர ஸ்வாமிகள் பலகாலம் தங்கியிருந்தார்கள். அந்த ஊரில்தான் ஒரு ஊமைப் பையனுக்கு ஞானத்தைக் கொடுத்து பரமானுக்ரஹம் செய்தார்கள். அந்த ஊரில் உள்ள ராதா நிலையத்தில் நம்முடைய ஸ்வாமிஜி முன்னிலையில் விஷ்ணுராத பாகவதரால் அஷ்டபதி பஜனையும், திவ்யநாம ஸங்கீர்த்தனமும், ராதா கல்யாணமும் நடைபெற்றது. பாகவத தர்மத்தைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உபந்யாசம் செய்தார்கள். பரம பாகவதோத்தமரான ஸ்ரீ சுப்பு ஸ்வாமிகள் என்ற மஹாத்மா வாழ்ந்த ஊர் இது. இந்த ஊரில் அஷ்டபதி பாடி ராதாகல்யாணம் செய்ய வேண்டும் என்று வெகுநாளாக ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு அவா. இந்த ஊரில் நடந்த ஸத்ஸங்கத்தில் பல பாகவதோத்தமர்கள் கலந்து கொண்டு ஆனந்தம் அடைந்தனர். ராதாகல்யாண ஏற்பாடுகளை ஸ்ரீ ஸ்வாமிநாதன் அவர்கள் மிகவும் சிறந்த முறையில் செய்திருந்தார்கள். அங்கிருந்து கிளம்பி தஞ்சாவூர் சென்று ஸ்ரீ ராஜகோபாலன் என்ற பக்தரின் இல்லமான மதுரமுரளி பவனத்தில் சிறிது நேரம் தங்கி சென்னை திரும்பினார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : உலகத்தில் அனுபவம் இல்லாத பலர், கடவுள், ஆத்மா என்று பிரசங்கம் செய்து வருவதனால் என்ன பலன் ஏற்படப்போகின்றது?*

பதில் : அத்தகைய உயர்ந்த அனுபவத்தை அடைந்த ஞானிகளுக்கு உலகத்தில், அதாவது பலதரப்பட்ட மக்களிடையே வந்து கலந்து பழகுவது என்பது மிகவும் கடினம். அனுபவம் இல்லாதவர்கள் அடிக்கடி கடவுள், மோக்ஷம், ஆத்மா என்ற சப்தங்களை உபயோகப்படுத்தும்பொழுது, அது ஸம்ஸாரிகளின் காதில் விழும். அப்படி அடிக்கடி கேட்பதால் அதில் அவர்களுக்கு ஆசை ஏற்படும். பிறகு அனுபவத்தை அடைவதற்காக உண்மையான அனுபவத்தை உடைய ஞானிகளை அவர்கள் தானாகவே தேடி வருவதற்கு இது பெரும் உதவியாக இருக்கும். அதனால், இவற்றினாலும் உலகத்தில் நன்மையே ஏற்படுகின்றது.

*கேள்வி : நீங்கள் அத்வைத சித்தாந்தத்தையே சார்ந்தவர்களாக இருக்கின்றீர்கள். ஆனால், எப்பொழுதும்*

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே,*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்று எல்லோரையும் சொல்லச் சொல்கின்றீர்களே? இது எப்படி?

பதில் : பகவத்கீதையில் பகவான் சொல்லும்பொழுது ''ஸ்வல்பம் அபி அஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்'' என்கிறான்.

அதாவது, தர்மத்தை சிறிய அளவிலே அனுஷ்டித்தாலும்கூட அது பெரிய பயத்தை போக்கிவிடும் என்கின்றான். ஆகவே, பகவந்நாம கீர்த்தனமே ஜீவன் முக்தியைக் கொடுத்துவிடும்.

*கேள்வி : சாஸ்த்ர ரீதியாக ஒருவருக்கு ஐந்துபேர் தந்தைக்கு சமமானவர்கள் என்று கூறப்பட்டுள்ளதே! அவர்கள் யார் யார்?*

பதில் : சரீரத்திற்கு காரணமானவர், காயத்ரி மந்திரத்தை உபதேசம் செய்தவர், அன்னமிடுபவர், கல்வி போதிப்பவர், ஞானத்தை உபதேசிப்பவர் இவர்கள் ஐவரும் தந்தைக்கு சமமானவர்கள்.

*கேள்வி : தகுந்த குருவை அடைந்து உபதேசம் பெற வேண்டும் என்று சொல்கின்றீர்கள். ஒருவன், தகுந்த குருவை அடையாவிட்டால் இந்தப் பிறவியில் அவனுக்கு இறைவனுடைய தர்சனம் கிடைக்கப் போவதில்லை. அவ்வளவுதானே?*

பதில் : அப்படி இல்லை. உடலிற்கு வியாதி வருமானால் அதைப் போக்கிக்கொள்ள தகுந்த மருத்துவரிடம் சென்று வைத்தியம் பார்த்துக்கொள்கின்றோம். அதே சமயத்தில், போலியான ஒரு மருத்துவரிடம் நாம் சென்றோமானால், வியாதி போகாதது மட்டும் இல்லாமல், நமக்கு அது மேலும், பல புதிய வியாதிகளை உண்டு பண்ணலாம். அல்லது பல பக்க விளைவுகளைத் தோற்றுவிக்கலாம். அதுபோல், தகுந்த குருவை அடையாவிட்டால், அவர் உன் பக்குவம் புரியாமல் ஏதாவது சாதனை அல்லது ஜபத்தை உபதேசம் செய்துவிடுவாரானால் அதனால் உனக்கு பல பாதிப்புகள் ஏற்படும்.

ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.

e-mail address for Books, Cassettes, CDs and Madhuramurali Magazine : publications@madhuramurali.org

# வேத கதைகள் -78

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ப்ரஹ்லாத சரித்ரம்

தேவர்களும், அசுரர்களும் ஒரு ஸமயம் போர் செய்வதற்கு முயற்சித்தனர். அப்பொழுது ப்ரும்மா தன் மூத்த பிள்ளையான இந்திரனை யுத்த பூமியிலிருந்து விலக்கி ரஹஸ்யமான ஓர் இடத்தில் ஒளித்து வைத்தான். பலசாலிகளான அசுரர்கள் துர்பலனான இந்திரனைக் கொல்லாமல் இருக்கட்டும் என்று எண்ணினார். அவ்விதம் கயாது என்ற ஹிரண்யகசிபுவின் மனைவியின் பிள்ளையான ப்ரஹ்லாதனும் தன் பிள்ளையான விரோசனனை அசுர சைன்யத்திற்குத் தலைவனாக இருந்தவனை யுத்த பூமியிலிருந்து வெளியேற்றி ஒரு ரஹஸ்யமான இடத்தில் ஒளித்து வைத்தான். என் பிள்ளையான விரோசனனை தேவர்கள் கொல்லக்கூடாது என்று எண்ணினான்.

இவ்விதம் இரு பக்கங்களிலும் அரசன் அற்ற தேவாசுர சைன்யங்கள் செய்வதறியாது தவித்தன. உடன் தேவர்கள் நான்முகனை அணுகினார்கள். அரசன் அற்ற சைன்யத்திற்குப் போர் ஏற்படாது. போர் புரிபவர்கள் தலைவன் இல்லாவிடில் ஓடிவிடுவார்கள். ஆதலால் தலைவன் ஒருவன் அவசியம் வேண்டும். இந்த விபரம் வால்மீகி ராமாயணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. கும்பகர்ணன் போருக்கு வரும்போது சுக்ரீவன் தூக்கிச் சென்றான். வானரப்படைகளுக்கு சுக்ரீவன் தலைவன். தலைவனைக் கொன்றுவிட்டால் வானரப்படைகள் தானாகவே ஓடிவிடும் என்று கும்பகர்ணன் எண்ணினான். ஆனால் சுக்ரீவன், கும்பகர்ணனைத் தாக்கிவிட்டு வெற்றியுடன் திரும்பினான். இதனால் தலைவன் இருந்தால்தான் போர் புரிய முடியும் என்ற உண்மை நமக்கு நன்கு விளங்குகிறது.

தேவர்களுக்கோ, இந்திரன் ஒளிந்திருக்கும் இடம் தெரியவில்லை. பிரும்மாவின் அனுமதி பெற்று இந்திரனை அடைவதற்கு பல யாகங்கள் செய்தனர். அவைகளால் இந்திரனை அடைய முடியவில்லை. பிறகு இஷ்டிகளால் இந்திரனை அடைந்தனர். இவைகளால் இந்திரன் அடையப்பட்டதாலேயே அவைகளுக்கு இஷ்டி என்ற பெயர் ஏற்பட்டது. அசுரர்களோ தன் தலைவனான விரோசனனை அடைய வழி தெரியாமல் தவித்தனர். பிறகு ரஹஸ்யமாக ஒரு ஒற்றனை தேவர்கள் சமீபம் அனுப்பினர். அவன் தேவர்கள் செய்யும்

யாகங்களைத் தெரிந்துகொண்டு அசுரர்களுக்குத் தெரிவித்தான். அசுரர்களும் தேவர்கள் செய்யும் யாகங்களைத் தங்கள் தலைவனை அடைவதற்காகச் செய்தனர். இந்த விருத்தாந்தத்தை தேவர்கள் அறிந்து கூடிப்பேசினர். நாம் யாவரும் மந்த்ரங்களை உரக்கச் சொல்வதால் அசுரர்கள் அறிந்து கொள்கின்றனர். ஆதலால், பிறகு செய்யும் உபசத்து என்ற யாகத்தை மந்த்ரங்களைப் மெதுவாகச் சொல்லி செய்வோம் என்று தீர்மானித்து அதன்படி செய்தனர். தேவர்கள் மந்த்ரங்களை மெதுவாக உச்சரித்ததனால் அசுரர்களால் அறிய முடியாமல் போயிற்று.

நம்மால் அறியக்கூடிய இந்த உப்புக்கடல் பாரத தேசத்திற்கு கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற மூன்று திக்குகளிலும் அருகில் இருக்கிறது. வடக்கிலோ அதிக தூரத்திலிருக்கிறது. பூமியின் கடைசி பாகத்தில் இருக்கிறது. இந்த விபரமும் ராமாயணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. ராமன் வனவாசம் முடித்து அயோத்தி திரும்பியபோது ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய எண்ணினர். நான்கு சமுத்திரங்களிலிருந்தும் ஜலம் கொண்டு வரவேண்டியிருந்தது. வடக்கைத் தவிர மூன்று திக்குகளிலும் ஒரே நாளில் வெவ்வேறு வானரர்களை ஜலம் எடுத்துவருமாறு அனுப்பினர். வடக்கு திக்கிலிருந்து ஜலம் கொண்டுவர ஹனுமாரை அனுப்பினார்கள். வடக்கு சமுத்திரமானது பூமியின் கடைசியிலிருப்பதால் ஒரே நாளில் வடக்குக் கடலிலிருந்து ஜலம் கொண்டு வர ஹனுமார் ஒருவரால்தான் முடியும். இதனால் வடக்குக் கடல் வெகுதூரத்தில் உள்ளது என்பதை ராமாயணத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

யாகத்தில் சாத்வானம் என்ற பள்ளத்தை சமுத்திரமாகக் கூறப்பட்டிருக்கிறது. கயாதுவின் பிள்ளையான ப்ரஹ்லாதன் தன் பிள்ளையான விரோசனனை ஒரு காரணத்தால் கோபம் கொண்டவனாக கையால் தூக்கி பூமியில் எறிந்தான். அந்த இடம் பள்ளமாக ஆயிற்று. அது முதற்கொண்டு பள்ளம் எல்லாம் அசுரர்களைச் சார்ந்ததாக ஆயிற்று. இந்த காரணத்தால் பள்ளத்தின் ஜலத்தால் ஆசமனம் செய்யக் கூடாது. இதை ஆபஸ்தம்பரும் கூறி இருக்கிறார். ''ந வருஷ தாராஸு ஆசாமேத் ந ப்ரதரோதகே'' என்று கூறி இருக்கிறார். மழை தாரை ஜலத்தையும், பள்ளத்திலுள்ள ஜலத்தையும் ஆசமனம் செய்யக் கூடாது. பாகவதத்திலும் ஹிரண்ய கசிபு, கயாது தம்பிதிகளின் பிள்ளை ப்ரஹ்லாதன் என்னும், ப்ரஹ்லாதன் பிள்ளை விரோசனன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு வேதத்திலுள்ள இந்தக் கதையே மூலமாக இருக்கக்கூடும் என்ற உண்மை நமக்கு நன்கு வெளிப்படுகிறது.

# மறக்க முடியாத நாள்

**- ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர்**
**''ஸ்ரீ காஞ்சி காமகோடிபட யசோ லஹரீ''**

1962 டிசம்பர் மார்கழி மாதம் ஸ்ரீ மஹாபெரியவர்கள் இளையாத்தங்குடியில் முகாம் இட்டிருக்கிறார்கள். நீண்டகால முகாம். புதுப்பெரியவர்கள், ஏகாந்தமாக சாதனையில் முழு நேரம் ஈடுபட்டிருக்கிறார்கள். சகோதரர்கள் நாங்கள் நால்வரும் பிக்ஷாவந்தனத்திற்காக முதல் நாள் இரவே அங்கு போய்ச் சேர்ந்துவிட்டோம். இளையாத்தங்குடியில் ஸித்தி அடைந்திருக்கும் ஸ்ரீ காமகோடி பீடம் பூர்வாசாரியாள் அதிஷ்டானத்தை ஒட்டிய பூஜகர் வீட்டில் பூஜை ஏற்பாடாகியிருந்தது. அங்கு கூட்டமே இல்லை.

அந்த வீட்டின் ஒரு சின்ன அறையில் கிழக்குப் பார்க்க ஒரு ஜன்னல். உள்ளே பூஜை. நாங்கள் ஜன்னலுக்கு வெளியே நின்று கொண்டிருக்கிறோம். காலை 4.30 மணிக்கு புதுப்பெரியவர்கள் தோளில் தண்டத்தைச் சார்த்திக்கொண்டபடியே குடம் குடமாக ஜலம் கொண்டு வந்து பூஜை அருகில் உள்ள வெள்ளித் தவலையிலும் சற்று தள்ளியுள்ள கங்காளத்திலும் நிரப்புகிறார்கள். பூஜை வேதி முதலியவைகளை அந்தந்த இடத்தில் வைக்கிறார்கள். ஸ்ரீ மஹா பெரியவர்கள் ஆசனத்தைத் தட்டி மேலே மடித்துணி மடித்துப் போடுகிறார்கள். தீபங்களுக்கு நெய் வார்த்து சுடர் தட்டுகிறார்கள். அபிஷேகங்களுக்கு பழரசங்கள் பிழிந்து, வடிகட்டி எடுத்து வைக்கிறார்கள். ஸ்ரீ மஹாபெரியவர்கள் அனுஷ்டானம் முடிந்து அந்த தீபவெளிச்சத்தில் தேஜோமயமாக உள்ளே நுழைகிறார்கள். அந்தச் சின்ன அறையில் மூன்றாவது நபர் நுழைய இடமில்லை.

ஸ்ரீ மஹாபெரியவர்கள் அமர்ந்ததும் பூஜைப் பெட்டிகளை எடுத்து பூஜை வேதியில் வைத்துவிட்டுப் புதுப்பெரியவர்கள் பூஜை விமானத்தைத் துடைத்து சுத்தம் செய்கிறார்கள். எல்லாம் தண்டத்தைத் தோளில் அணைத்தபடியே. கொஞ்சம் அயர்ந்தாலும் தண்டம் கீழே விழும் அல்லது பூஜையின் மேல் விழும். அவ்வளவு ஜாக்கிரதையுடன், நிதானமாகவும், சுறுசுறுப்பாகவும் பார்த்துப் பார்த்துச் செய்கிறார்கள்.

வெளியில் இருந்தபடியே சாஸ்திரிகள் மந்திரம் சொல்கிறார். புதுப்பெரியவர்கள் ஆபரணங்களைச் சரிபார்த்துத் துடைத்து வைத்துவிட்டுப் பால் அபிஷேகம் முடிந்தவுடன் ஜன்னல் கதவைச் சாத்துகிறார்கள். பிறகு, சந்தனாபிஷேகத்தின்போது திறந்து மறுபடியும் மூடுகிறார்கள். உள்ளே நிவேதனங்களை அவர்களே கொண்டு வைத்திருக்க வேண்டும். தீபாராதனையின்போது ஜன்னலைத் திறக்கிறார்கள். தீபங்களை வரிசையாக எடுத்துக்கொடுக்கிறார்கள். முன் தீபங்களை அப்புறப்படுத்துகிறார்கள்.

வெளியிலே நாங்கள் பனியிலே சால்வைகளைத் தலைமுதல் கால்வரை போர்த்திக்கொண்டு வெடவெடவென்று குளிரில் நடுங்கிக் கொண்டு தர்சனம் செய்கிறோம். உள்ளே புதுப்பெரியவர்கள் வியர்க்க வியர்க்க பம்பரமாகக் கைங்கர்யம் செய்கிறார்கள். பூஜை முடிந்ததும் ஸ்ரீ மஹாபெரியவர்கள் உள்ளே போய்விட்டார்கள். புதுப்பெரியவர்களும் அதிஷ்டானத்திற்குப் போய்விட்டார்கள். காலை 7.30 மணிக்கு நாங்கள் பிக்ஷாவந்தன சாமான்களுடன் காத்திருக்கிறோம். ஸ்ரீ மஹாபெரியவர்கள் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு வந்து வாசல் வராந்தாவில் அமருகிறார்கள். நாங்கள் பிக்ஷாவந்தனம் செய்கிறோம். சிப்பந்திகள் பிக்ஷாவந்தன சாமான்களை எடுத்துச் செல்கிறார்கள்.

பதினைந்து இருபது நிமிஷம் மௌனத்திற்குப் பிறகு ஸ்ரீ மஹாபெரியவர்கள் பேச ஆரம்பிக்கிறார்கள்.

''நீங்கள் எல்லாம் பனியிலும் ஊதலிலும் நின்று பூஜை தர்சனம் பண்ணினேளோ?'' நாங்கள் மௌனமாகத் தலை அசைக்கிறோம். ''உள்ளே ஒரே கீக்கடம். அதிஷ்டானத்திலேயே புதுப்பெரியவர் இருக்கிறதனாலேயே அவர் இருக்கிற இடத்திலே பூஜை நடக்கணும்னு தோணித்து. இங்கே பெரிசாக் கொட்டகை எல்லாம் போடறோம்னு சொன்னா. அதிஷ்டானம் சத்தம் இல்லாமல் சாந்தமாக இருக்கணும்கிறதினாலே அதெல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டேன். அதுவோ சின்ன உள்ளு. மூன்று பேர்கூட அங்கே நடமாட முடியாது. தானே பூஜை கைங்கர்யம் பண்ணனும்னு புதுப் பெரியவா ஆசைப்பட்டா. விஸ்தாரமான இடமாக இருந்தா இரண்டு பேர் சகாயத்துக்கு வைச்சுக்கலாம். இங்கே இவ்வளவுதான் இடம்.

புதுப்பெரியவா பீடாதிபதி. நான் எக்ஸ் தானே? பீடாதிபதிகளை இப்படி வேலை வாங்கறேன்னு நீங்க நினைக்கலாம். நான் கூட வேண்டாம்னு சொன்னேன். புதுப்பெரியவாதான் பிடிவாதமாக மன்றாடி எங்கிட்ட பர்மிஷன் வாங்கிப்பிட்டா. ரொம்ப சிரமப்படறா நாலு நாளாக. காமகோடி கைங்கர்யம் ரொம்ப சிரமம்னு அந்த நாளிலே இருந்தது. இந்த நாளிலே கூடவான்னு நீங்க நினைக்கலாம். சிரமமான காரியமானாலும் பிரியம், பக்தின்னு வந்திட்டா சிரமம் தெரியாது. அதிலே ஒரு சந்தோஷம், திருப்தி எல்லாம் ஏற்பட்டுவிடுகிறது. அதனாலேயே புதுப்பெரியவா இந்தக் கைங்கர்யம் பண்றா என்று நினைக்கிறேன்'' என்று சொல்லி நிறுத்தினார்கள்.

''எங்களுக்கும் குரு கைங்கர்யத்திலே இவ்வளவு சிரத்தை வரணும்னு பெரியவாதான் அனுக்ரஹம் பண்ணனும்'' என்று எங்கள் அண்ணா பிராத்திக்கிறார். அதற்கு ஸ்ரீ மஹாபெரியவர்கள், ''புதுப்பெரியவாளை ஆச்ரயங்கோ. குரு கைங்கர்யம் நன்றாக சித்திக்கும்'' என்று அருள்பாலிக்கிறார்கள். பகல் பூஜைக்குப் பிறகு ஸ்ரீ மஹாபெரியவர்கள் எங்களை அழைத்து பிரசாதம் கொடுக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் புதுப்பெரியவர்களை ஸ்ரீ மஹாபெரியவர்கள் அனுமதி இல்லாமல் தர்சனம் செய்ய முடியாது. நாங்கள் அனுமதி கேட்கிறோம். ஸ்ரீ மஹாபெரியவர்கள் ஒரு பையனை அழைத்து, ''இவர்களுக்கு நாலு மணிக்கு மேல் புதுப்பெரியவாளை தர்சனம் செய்து வை'' என்கிறார்கள். நாங்கள் காத்திருக்கிறோம்.

அப்பொழுது நான் தஞ்சாவூர் ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தின் மானேஜிங் டிரஸ்டி. கோவிலில் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. ''ஸ்ரீ மஹாபெரியவாள் வந்து கும்பாபிஷேகம் செய்ய வேணும். அது நடந்த பிறகுதான் யாத்திரை என்ற தீர்மானத்துடன் இளையத்தங்குடியில் தங்கி இருக்கிறார்கள். இரண்டு தடவை கும்பாபிஷேகத்திற்கு நாள் வைத்துக் கொடுத்தார்கள். திருப்பணி முடியவில்லை. கும்பாபிஷேகம் தட்டிப் போகிறதே'' என்று வேதனையுடன் அன்று மாலை புதுப்பெரியவர்களை நான் வந்தனம் செய்கிறேன்.

‘‘ஸ்ரீ மஹாபெரியவாள் இரண்டு தடவை நாள் வைத்துக் கொடுத்தும் கூட அவர்கள் சொன்னபடி எங்களால் செய்ய முடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது’’ என்று சொல்கிறேன்.

அதற்கு புதுப்பெரியவர்கள், ‘‘அவர்கள் சொன்னபடி நாம் நடக்காவிட்டாலும்கூட அவர்கள் நம்மைக் கருணையோடு கடாக்ஷிக்கிறார்களே! அதனாலேதான் அவர்கள் மஹாபெரியவாளா இருக்கிறார்கள். அதனாலே ஏன் வருத்தப்பட வேண்டும். ஆகவேண்டியதைப் பார்’’ என்று சொல்லி அருள் செய்தார்கள்.

அந்த நாளை மறக்க முடியுமா?

---

ஒவ்வொரு மாதமும் மதுரமுரளி இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் முன் அனுமதி பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam,
New No.2, (Old No.24), Netaji Nagar,
Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

# எந்தரோ மஹானுபாவுலு - 69

முன்னிரவில் ஸ்ரீவாஸ்பண்டிதரின் குழந்தை மரணம் அடைந்திருந்தான். நடுஇரவு வரை பஜனை நடந்துகொண்டிருந்தது. எத்தனை நேரம் இந்த விஷயத்தை மூடி மறைக்க முடியும்? மெதுவாக விஷயம் பக்தர்கள் மத்தியில் பரவியது. காதும் காதும் வைத்து பரவிவிட்டது. கேட்டவர்கள் உடனே கீர்த்தனத்தை நிறுத்தி மௌனமாகி விடுவார்கள். இப்படியே ஒவ்வொரு வாத்யமாக நின்றது. ஸ்ரீ மஹாப்ரபுவும் மெதுவாக நடனத்தை நிறுத்திவிட்டு ஸ்ரீவாஸ்பண்டிதரைப் பார்த்து, ''உங்கள் வீட்டில் ஏதேனும் கெட்ட நிகழ்ச்சி நேர்ந்துள்ளதா என்ன? என் மனம் கீர்த்தனத்தில் லயிக்கவில்லையே! மனதில் ஒருவிதமான உளைச்சல் ஏற்படுகிறதே!'' என்று வினவினார்.

மிகவும் தீனமான குரலில் ஸ்ரீவாஸ்பண்டிதர், ''ப்ரபோ! நீங்கள் கீர்த்தனம் செய்யுமிடத்தில் எப்படி துர்நிகழ்ச்சி ஏற்படும்? அனைத்து கெட்ட செயல்களையும் நிவாரணம் செய்பவர் தாங்களல்லவா? உங்களுக்கு முன்பு கெட்ட காரியங்கள் வரவே பயப்படுமே! நீங்கள் மங்கள ஸ்வரூபியாயிற்றே!'' என்றார்.

ப்ரபு த்ருடமாக, ''இல்லை இல்லை! உண்மையைச் சொல்லுங்கள்! என் மனதில் வ்யாகுலம் ஏற்படுகிறது! ஏதோ கெட்ட நிகழ்ச்சி நிகழ்ந்துள்ளது! ஹ்ருதயம் வெடித்துவிடும்போல் இருக்கிறது!'' என்றார். இப்படி ப்ரபு த்ருடமாகக் கேட்டதும் ஸ்ரீவாஸ்பண்டிதர் மௌனமாகிவிட்டார். ஒரு பக்தர் மெதுவாக, ''ஸ்ரீவாஸ்பண்டிதரின் ஒரே புத்ரன் மரணமடைந்தான்'' என்று ப்ரபுவிடம் கூறினார்.

உடனே ப்ரபு பரபரப்புடனும் ஆச்சர்யத்துடனும் ஸ்ரீவாஸ் பண்டிதரைப் பார்த்து ''என்ன சொன்னார்கள்! உன் புத்ரனின் மரணமா? பண்டிட்ஜி! ஏன் ஒன்றும் சொல்லாமலிருக்கிறீர்கள்?'' என்று பதைபதைத்தார். அதே பக்தர், ''ப்ரபோ! பையன் இறந்து நெடுநேரமாகிறது! உங்கள் ஆனந்த நடனத்திற்கு விக்னம் ஏற்படக்கூடாது என்று ஸ்ரீவாஸ் பண்டிதர் தான் இதை வெளிப்படுத்தக்கூடாது என்று அனைவரையும் மிரட்டி இருக்கிறார்'' என்று கூறினார்.

இதைக்கேட்ட ப்ரபுவின் நயனங்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடியது! தழுதழுத்த குரலில், ''ஸ்ரீவாஸ்! நீ ஸ்ரீ க்ருஷ்ணனை விலைக்கு வாங்கிவிட்டாயே! இப்படி ஒரு த்ருடமான பக்தியா? ஒரே பிள்ளையின் பிணத்தை உள்ளே வைத்துவிட்டு ப்ரேமையுடன் கீர்த்தனம் செய்கிறாயே! உன்னுடைய பக்தியும், க்ருஷ்ணப்ரேமையும் தன்யமானது! உன்னைப் போன்ற பக்தர்களின் தர்சனத்தாலேயே கோடி ஜன்ம பாபம் அழியும்!'' என்று கூறிவிட்டு குலுங்கி குலுங்கி அழுதார்.

மஹாப்ரபு இப்படி அழுவதைப் பார்த்த ஸ்ரீவாஸ் பண்டிதர், ''ப்ரபோ! புத்ர சோகத்தை சகித்துக்கொள்வதில் நான் சமர்த்தனாக இருக்கலாம்! ஆனால், நீங்கள் இப்படி அழுவதைத் தாங்கிக்கொள்ள என்னால் இயலாது! அனைத்து ஜீவன்களுக்கும் நீங்கள்தான் ஆச்ரய**தா**தா! உங்கள் நயனங்களிலிருந்து கண்ணீர் பெருக்கி என்னை வருத்தாதீர்கள். என்னால் அதைத் தாங்க முடியவில்லை'' என்றார்.

இதற்குள் இறந்த சடலத்தை முற்றத்தில் கொண்டு கிடத்தினர். ப்ரபு பிணத்தின் தலைமாட்டில் அமர்ந்து தலையைத் தடவிக்கொண்டே உயிருள்ள மனிதனிடம் பேசுவது போல், ''ஜீவனே! நீ எங்கு உள்ளாய்! இந்த உடலை விட்டு ஏன் சென்றுவிட்டாய்?'' என்று கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டார். அப்போது ப்ரபுவின் அந்தரங்க பக்தர்கள் அனைவரும் கேட்கும்படியாக அந்த இறந்த சடலத்திலிருந்து பதில் வந்தது. ''ப்ரபோ! நான் கர்ம வசப்பட்டவன்! இந்த சரீரத்துடன் எனக்கு இன்றுவரைதான் ஸம்ஸ்காரம் உள்ளது. நான் சென்று விட்டேன்! நான் இப்போது மிகவும் உயர்ந்த இடத்தில் மிகவும் ப்ரஸன்னமாக இருக்கிறேன்'' என்றது.

ப்ரபு கேட்டார், ''இன்னும் சிறிதுகாலம் இந்த சரீரத்தில் ஏன் இருக்கக்கூடாது.'' அதற்கு அந்த சீவன் ''ப்ரபோ! நீங்கள் அனைத்தும் அறிந்தவர்! நீங்களே ப்ராரப்தத்தை அழிக்கக்கூடிய திறன் உள்ளவர்! ஆனாலும், எனக்கு இந்த சரீரத்தில் இன்றுவரைதான் போகம் உள்ளது. எனக்கு இதில் இனி வசிக்க இச்சையுமில்லை. ஏனென்றால், நான் இப்போது இருக்குமிடத்தில் இதைவிட ஆனந்தமாக இருக்கிறது.'' என்று பதிலுரைத்தது.

ஜீவனின் பதிலைக் கேட்டதும் அங்குள்ளவர்களின் சோகம், மோஹம் நீங்கியது! ப்ரபு, ''ஸ்ரீவாஸ்! நீரே அனைத்தும் அறிந்தவர். இந்த புத்ரனுடன் உங்களுக்கு இத்தனை நாட்கள்தான் ஸம்ஸ்காரம். அதனால் அவனைப் புத்ரன் என நினைத்தீர்கள்! இனி நானும் நித்யானந்தரும் உங்களுக்கு இரு புத்திரர்கள்! எங்களை உங்கள் சொந்தப் பிள்ளையாக நினைத்துக்கொள்ளுங்கள்!'' என்றார்.

ப்ரபுவின் ப்ரேம வசனங்களால் ஸ்ரீவாஸ்பண்டிதர் நெக்குருகிப் போனார். விதிப்படி பிள்ளைக்கு செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய்து முடித்தார். ஒரே பிள்ளையின் மரணத்தால் கூட பாதிக்கப்படாத ஸ்ரீவாஸ்பண்டிதரை சாதாரண மனிதன் என்று சொல்லிவிட முடியுமா என்ன!

ஸ்ரீமத் பாகவதத்தில் ஹரியோகேச்வரர் கூறுகிறார்.

WB\'O' â\'@;Xb<]pAb
SZX<NE'Sq@Yb<SZ_OSpTu$
âQ@PXs'"_lQpzTS:_"
TjW\'OESçO\bQ@Qpt':$ (11/2/54)

பகவத் சேவையினால் பரம ஸுகம் கிடைப்பதால், பகவானின் சிவந்த கோமள சரணாரவிந்தத்தின் மணிபோல் ப்ரகாசிக்கும் நகச்சந்திரனின் சீதள கிரணங்களின் சோபையால் ஒரு முறை மனதின் தாபம் தணியப் பெற்ற பக்தன், ஸம்ஸார ஸுகங்களின் வியோகத்தால் ஏற்படும் துக்கத்தால் பாதிக்கப்படுவதில்லை என்பது இதன் அர்த்தம்.

இப்படி பக்தர்களின் லீலைகள் அனந்தம். அது சாதாரண புத்திக்கு அப்பாற்பட்டது. பகவான் யாரை வரிக்கிறாரோ, யாருக்கு க்ருபை செய்கிறாரோ அவனுக்குத்தான் மஹா புருஷர்களிடம் பகவத் **பா**வனை ஏற்படுகிறது! மஹா ப்ரபுவின் லீலைகள் ப்ரேம ரஸத்தால் நிரம்பியது. ஏனென்றால், ப்ரேமையின் ஸகுணமூர்த்தி ப்ரபுவாயிற்றே!

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 73

நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய நிறை குறைகளை நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். நம்மிடம் உள்ள நல்ல குணங்களையும், திறமைகளையும் பற்றி சிலர் புரிந்துகொள்ளாமல் தவறாகப் பேசினால் எப்படி நாம் கவலைப்படக் கூடாதோ, அதுபோல், நம்மிடம் இல்லாத குணங்களையும், திறமைகளையும் பற்றி பலர் புகழ்ந்து பேசினால், அதை ஏற்கக்கூடாது.

ஆரம்பத்தில் மறுக்க ஆரம்பிக்கக்கூடிய நாம், நாளடைவில் நமக்கே அத்தகையவைகள் எல்லாம் உண்மையில் நமக்கு இருக்கின்றது என்று நம்ப ஆரம்பித்துவிடுவோம். நாம் சும்மா இருந்தாலும் கூட நம்மிடம் இருந்து ஏதாவது கார்யத்தை சாதித்துக்கொள்ள விரும்புபவர்களும், அல்லது அவமானப்படுத்தத் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்களும் நம்மை இப்படி கிளப்பி விட்டு விடுவார்கள். நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதை விளக்கக்கூடிய அளவில் மஹாபாரதத்தில் ஒரு அழகான கதை சொல்லப்படுகின்றது.

ஒரு ஊரிலே ஒரு வியாபாரி இருந்து வந்தார். அவருக்கு சிறுவர்களான மகன்கள் இருந்து வந்தனர். அவர்கள் தினமும் உணவு உட்கொண்ட பிறகு மீதம் இருக்கும் உணவை ஒரு காகத்திற்கு தூக்கி எறிவார்கள். இவ்வாறு மீதம் இருக்கும் நெய்ச்சோறு, தயிர், பால், முதலியவற்றையும் கலந்த சோறு, மாமிசம், தேன் போன்ற எச்சில் உணவுகளையும் உண்டு அந்த காகம் கொழுத்திருந்தது. அதனால் அந்தப் பறவை தன்னை மற்ற பறவைகளைவிட தான் மிகப் பெரியவன் என்ற எண்ணம் அதற்கு வந்துவிட்டது.

ஒரு நாள் சில அன்னப்பறவைகள் கடற்கரை ஓரத்தில் சென்று கொண்டிருந்தன. அதைப் பார்த்த அந்த வியாபாரியின் சிறுவர்கள், தங்களுடைய எச்சில் உணவை உண்டு வளர்ந்து வந்த காக்கையைப் பார்த்து, ''நீயும் அந்த அன்னப்பறவைக்குச் சமம்தானே. அப்படி இருக்கையில் அவற்றைப்போல் நீ ஏன் பறக்க மாட்டேன் என்கின்றாய்?'' என்றார்கள். அந்த காக்கைக்கு இருந்த இறுமாப்பின் காரணமாகவும், கர்வத்தின் காரணமாகவும், மூர்க்கத்தனத்தின்

காரணமாகவும் அந்தச் சிறுவர்களின் வார்த்தையை உண்மை என்று நம்பிவிட்டது. அன்னப் பறவைகள் பறப்பதுபோல் தன்னால் பறக்க முடியும் என்றே நினைத்துவிட்டது. தானே அன்னப் பறவைகளை போட்டிக்கு அழைத்தது. அதிலும், அந்த அன்னப் பறவைகளைப் பார்த்து, ''உங்களில் சிறந்தவர் யாரோ அவன் என்னுடன் போட்டிக்கு வரவேண்டும்'' என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்தது. அந்த அன்னப்பறவைகள் காக்கைக்கு அதனுடைய பலவீனத்தை எவ்வளவோ எடுத்துக்கூறின. அவைகள் எல்லாம் அந்த காகத்தின் காதில் ஏறவே இல்லை.

போட்டி தொடங்கியது. காக்கையுடன் போட்டிக்கு வந்த அன்னப்பறவை வேண்டும் என்றே கொஞ்ச நேரம் மெதுவாகப் பறந்தது. அப்போது காக்கை வென்றுவிட்டது போல் காக்கைக் கூட்டங்கள் எல்லாம் எண்ணி ஆர்ப்பரித்தன. உடனே அன்னப்பறவை மேலே மேலே சென்று பறக்க ஆரம்பித்துவிட்டது. காக்கையால் எவ்வளவு முயன்றும் சிறிது உயரத்திற்கு மேல் பறக்க முடியவில்லை. அதோடு மட்டும் இல்லாமல் கடலில் வேறு விழுந்துவிட்டது. உயிருக்கே ஆபத்து. அப்பொழுது மேலே பறந்து செல்லும் அன்னப்பறவையைப் பார்த்து தன்னைக் காப்பாற்றும்படி காக்கை கெஞ்சியது. அன்னமும் இரக்கத்துடன் கடலில் விழுந்த அந்த காக்கையை முதுகில் ஏற்றிக்கொண்டு, காக்கையைப் பழைய இடத்திலேயே இறக்கிவிட்டது. காக்கையின் கர்வமும் அழிந்தது. அவமானமும் அடைந்தது. தன் நிலையை உணர்ந்து வெட்கம் அடைந்தது.

ஆகவே, பிறர் நம்மைப் பற்றிச் சொல்வதையெல்லாம் நாம் அப்படியே நம்பிவிடக்கூடாது. நம் நிலைமையை நம்மைக் காட்டிலும் நமக்குச் சரியாக எடுத்துச் சொல்பவர்கள் வேறு யார் உண்டு?

## திருநாங்கூர் திவ்யதேசங்கள் பன்னிரண்டு கருடசேவை

தேதி : 21.01.2004 முதல் 23.01.2004 வரை

இடம் : ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்
வைணவ ஆகம ப்ரபந்த வேத பாடசாலை
புருஷோத்தமன் ஸந்நதி, திருநாங்கூரில்
'ஹரே ராம......'' நாமகீர்த்தனம் நடைபெறும்.

# ரஸ மார்க்கம்

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

ரஸ மார்க்கம் உயர்ந்தது. பவித்ரமானது, அலௌகீகமானது, அநிர்வசனீயமானது. அதனாலேயே, இது உலகத்திற்குப் புரியாதது. புரியாதது என்று சொல்லிவிட்டு அதைப் பற்றி எழுதுவானேன் என்றால், புரிந்ததோ இல்லையோ, இப்படிப் புரியாத ஒன்று இருக்கின்றது என்றாவது தெரிந்துகொள்ளலாமே! ஒருவர் நாவல் படிக்கின்றார், அந்தக் கதையைப் படிப்பதனுடைய பலன் என்ன? அந்த காவ்ய ரஸத்தை அனுபவிப்பதே அதன் பலன். ஒருவன் ஒரு நல்ல சங்கீதத்தைக் கேட்கின்றான். அதன் பலன் என்ன? அந்த சங்கீதத்தை அனுபவிப்பதுதான் அதன் பலன் அல்லவா? அது போலவேதான் இந்த ரஸமார்க்கம் என்பது.

பகவானுக்கு அலங்காரம் செய்து அனுபவிக்க வேண்டும். திருமஞ்சனம் செய்து அனுபவிக்க வேண்டும். அவனுடைய கதையைக் கேட்டு, அவனுடைய புகழைப்பாடி அவனுக்கு உத்ஸவங்கள் கொண்டாடி அனுபவிக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதால் நமக்கு வாழ்க்கையில் நன்மைகள் நடக்கும். கஷ்டங்கள் விலகும் என்று எதிர்பார்க்கக்கூடாது என்பது மட்டும் அல்ல, நமக்கு மோக்ஷம் கிடைக்க வேண்டும், சித்த சுத்தி ஏற்பட வேண்டும், தெய்வீக காட்சிகள் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும்கூட கூடாது.

வாழ்க்கையில் அவரவர்களுக்கு பிராரப்த வசத்தினால் ஏற்படக்கூடிய சுக துக்கங்களை, ''இது உலக இயற்கை'' என்று ஒரு ஸாதாரண மனிதன் அனுபவிப்பதுபோல் அனுபவிக்க வேண்டும். துக்கம் ஏற்படக்கூடிய நிலையில் அவற்றை விலக்கிக் கொள்வதற்காக எந்த முயற்சியும் பரிகாரமும் செய்யக்கூடாது. சுகம் தானாக ஏற்படுமானால், அதை தர்மத்திற்கு உட்பட்டுத் தேவையான அளவில் ஏற்றுக்கொள்ளலாம்.

''இவையெல்லாம் சரி. நாம் எதையும் எதிர்பார்த்துச் செய்யவில்லை என்றாலும் கூட இவைகளை எல்லாம் செய்வதாலேயே

தானாகவே இந்த உலகத்திற்கு வேண்டிய நன்மைகளோ, பகவத் தர்சனமோ நிகழாதா?'' என்ற கேள்வி உங்களுக்கு எழும். அப்படி ஒரு கேள்வி எழுகின்றது என்றாலே உங்களுடைய அடிமனதில் அப்படி ஒரு எண்ணம் இருக்கின்றது என்று அர்த்தம். அப்படி ஒரு எதிர்பார்ப்பு அடிமனதில் இருந்தாலே நாம் ரஸமார்க்கத்திற்கு அருகதை இல்லாதவர்களாக ஆகிவிடுவோம்.

வாழ்க்கையில் ஏற்படும் துக்கத்திற்குப் பரிகாரம் செய்து கொள்ளக்கூடாதே தவிர ஒரு ஸாமான்ய மனிதன் புலம்புவதுபோல் புலம்புவதில் தவறில்லை. ஆனால், அதில் மறந்தும் ஒரு எண்ணம், ''நான் உன்னை இவ்வளவு நாள் பக்தி செய்தது வீணாகப் போய்விட்டதே. நீ என்னைக் கைவிட்டுவிட்டாயே'' என்ற எண்ணம் வரக்கூடாது. இதுதான் ரஸமார்க்கத்தைப் பற்றி ஒரு அடித்தளம். இந்த ரஸமார்க்கத்தில் நாம் பகவானிடம் கொண்டுள்ள அதீத ப்ரேமையினால், நம்மை பகவான் கவனிக்கின்றானா? நம்மை அவன் ஏற்றுக்கொள்கின்றானா? என்பதையெல்லாம் பற்றி கவலைப்படாமல் அவன் மீது எல்லையற்ற ஒரு பிரேமையைக் கொட்டுவது. இது எப்படி ஸாத்யம் ஆகும்?

உலக ரீதியாக, நம்மிடம் அன்பைக் காட்டுபவர்களிடம் நம்மால் பிரதியாக அன்பு காட்ட முடியும். நம்மை வெறுப்பவர்களிடம் கூட பிரேமையைக் கொட்ட முடியுமா? என்ற கேள்வி எழும். பிரேமைக்கு பதில் பிரேமைதான். இருந்தபோதிலும் அதீதமான பிரேமை வரும்பொழுது அது இந்த நியமங்களை எல்லாம் எதிர்பார்க்காது.

உலகத்தில் ஒரு பெண்ணை ஒருவன் காதல் செய்கின்றான். அவள் இவனை வெறுக்கின்றாள், திட்டுகின்றாள், அடிக்கின்றாள். எல்லா விதத்திலும் அவமானப்படுத்துகின்றாள். இருந்தபோதிலும் அவள் மேல் கொண்ட மோஹத்தினால் அவள் எத்தனை துன்புறுத்தினாலும், அவமானப்படுத்தினாலும், சிரித்துக்கொண்டே அவள் பின் செல்கின்றான். கடைசியாக அவள் கிடைக்கமாட்டாள் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டால் உயிரை விட்டுவிடுகின்றான்.

சாதாரணமாக உலகத்திலேயே இத்தகைய ஒரு நிலையைப் பார்க்கும்பொழுது பகவானிடம் இத்தகைய நிலையில் பக்தி செய்ய முடியும். இதுவே ரஸமார்க்கம்!

# மாலே மணிவண்ணா -16

- மஹாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

'அமலனாதிபிரான்' என்னும் பாசுரத்தில் ஆழ்வார் ஆழங்காற்பட்டது செய்ய தாமரைத் திருவடியிலும் இத்திருமேனி நிறத்திலும் அன்றோ. ஆழ்வார் சொல்லிய அவ்விரண்டழகும் அவர்க்கு நெடுங்காலம் முன்னர்த் தோன்றிய பரிபாடல் மூன்றாம் பாடலிலும் அப்படியே அமைந்து கிடக்கின்ற அழகு தேடுந்தோறும் இனிதாம் தமிழ்'' என்று சொல்லத் தோன்றுகிறது.

*''அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த*
*விமலன், விண்ணவர் கோன்விரையார் பொழில் வேங்கடவன்*
*நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள் மதிள் அரங்கத்தம்மான், திருக்*
*கமல பாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஏக்கின்றதே.*

என்று 'மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி' தொட்டுப் பாசுரம் தொடங்குகிறார் திருப்பாணாழ்வார். செந்தாமரை போன்ற திருவடிகளைக் 'கமலபாதம்' என்றார் பாண் பெருமாள். 'குற்றம் அற்ற சிவந்த அடி' என்று தன்மையைச் சுட்டியது பரிபாடல்.

அடுத்து பாசுரத்தை இறுதியில் முடிக்கும்போது, ஆழ்வார்,

*''ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்*
*ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்*
*கோலமா மணி ஆரமும் முத்துத்தாமமும்*
*முடிவு இல்லதோர் எழில் நீலமேனி*
*ஐயோ நிறைகொண்டதுஎன் நெஞ்சினையே!*

என்று நெஞ்சை நிறை கொண்ட நீலமேனியில் முடிக்கிற அழகை அப்படியே தொட்டு,

*''மணி திகழ் உருவின் மாஅயோயே''*

என்று பரிபாடல் முடிகிறது.

தியானப் பொருளாய் கண்வழி நுழைந்து கண்ணின் உள்ளன வாய்விடுகிற சேவடியாகிய கமலபாதமும், இடையறாது நெஞ்சில்

நிறை கொண்டுவிட்ட மணி திகழ் உருவினதாய் 'நீலமேனி'யும் வேறு ஒன்றில் புகுதா வண்ணம் இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும் எம்பெருமானை அன்றிப் பிறவற்றைப் பாராதும் எண்ணாதும் செய்து விடுதலின்.

*''மறு பிறப்பு அறுக்கும் மாசில் சேவடி*
*மணிதிகழ் உருவின் மாயோயே''*

என்ற பரிபாடல் ஆழ்வார் அருளிச்செயலாலும் உறுதியாகிறது. அப்பெருமானைத் தியானித்து மேலே செல்வோம்.

(தொடரும்)

---

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**, 11-11-2003 அன்று திரு. A.S. சத்தியமூர்த்தி அவர்கள் வீட்டில் ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் ஆரம்பித்து வைத்தார்கள். இங்கு ப்ரதி ஞாயிறுதோறும் மாலை 4 மணிக்கு நாமஸங்கீர்த்தனம் நடைபெறும். அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம்.

விலாசம்

**திரு. A.S. சத்தியமூர்த்தி,** *புதிய எண். 9 (ப. எண்.4),*
*கலெக்டர் சிவகுமார் தெரு, கே.கே. புதூர்,*
*கோயம்புத்தூர் - 641 038 ✆ 0422-2447107*

இங்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் வெளியீடுகளான புத்தகங்கள், கேசட்டுகள் மற்றும் CDகள் கிடைக்கும்.

---

டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 14-ந் தேதி வரை ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் தினமும் காலை 4.30 மணிக்கு தனுர்மாத பூஜை நடைபெறும்.

தினசரி கட்டளை : ரூ.150/-

கோயில் தரிசன நேரம் : காலை 4.30 முதல் 9.30 வரை
மாலை 5.00 முதல் 8.00 வரை

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 (தொடர்ச்சி)

புஜாரி குகைக்குச் சென்றதும் லாலாபாபு, ''என்ன புஜாரி? மறுபடியும் என்ன கொண்டு வந்திருக்கிறாய்? நீ ஏற்கனவே தந்ததையே என்னால் முழுவதும் சாப்பிட முடியவில்லை. அதோ பார்! நீ தந்த தாம்பாளம் கிடக்கிறது!'' என்றார். ''யார் கொணர்ந்தார்கள் அதை'' என்று புஜாரி கூவினார். லாலாபாபு புஜாரியை ஆச்சரியமாகப் பார்த்து, ''என்ன! நீ கொண்டு வரவில்லையா?'' என்றார். ''நான் கொண்டு வரவுமில்லை. அனுப்பவுமில்லை'' என்றார் புஜாரி.

''இல்லை இல்லை. நீதான் கொணர்ந்தாய். ஏன் மழையில் இவ்வளவு தூரம் நனைந்துகொண்டு வந்தாய்? என்று உன்னை நான் கோபித்துக் கொண்டேன்! நீ சிரித்துக்கொண்டே சென்றுவிட்டாய். நீ எப்படி எல்லாவற்றையும் மறந்துவிட்டாய். ஏதாவது கள்ளு குடித்தாயா?'' என்று லாலாபாபு வினவினார்.

புஜாரிக்குத் தான் கள்ளு குடிக்கவில்லை என்று தெரியாதா என்ன? அழுதுகொண்டே பாபாவை நமஸ்கரித்துவிட்டு, ''பாபா! நீங்கள் பாக்யசாலி. கிரிராஜாவை அன்பினால் வென்றுவிட்டீர்கள். நீங்கள் பசித்திருப்பதைத் தாள முடியாமல் அவனே மழையில் நனைந்து கொண்டு வந்து உங்களுக்குப் ப்ரசாதம் தந்து சென்றிருக்கிறான்'' என்றார்.

இதைக் கேட்ட லாலாபாபுவின் சரீரம் அஷ்டவிதமான சாத்வீக **பா**வத்தால் தாக்கப்பட்டது. நினைவிழந்து பூமியில் விழுந்தார். நினைவு வந்ததும் அழுதுகொண்டே, ''ப்ரபு! இந்த தகுதியற்ற ஏழைக்காக நீங்கள் இப்படி ச்ரமப்பட்டீர்களே! உங்களைப் புரிந்து கொள்ளக்கூட எனக்கு தெரியவில்லையே! நீங்களே விரும்பாவிட்டால் உங்களை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? இவ்வளவு கருணையுள்ள நீங்கள் ஏன் வேஷமிட்டு வரவேண்டும்? என்னுடைய விரகத்தையும் பக்தியையும் அதிகரிக்கச் செய்யத்தான் இப்படிச் செய்தீர்களா?'' என்று மிகவும் புலம்பினார்.

கோவர்த்தனத்தில் வாழ்ந்த க்ருஷ்ணதாஸ் பாபாஜியைத்தான் தன் மனதில் குருவாக லாலாபாபு வரித்திருந்தார். ஒருநாள் அவரிடம் தனக்கு தீக்ஷை அளிக்குமாறு வேண்டினார்.

''உனக்கு தீக்ஷை அளிக்கும் நேரம் இன்னும் வரவில்லை. பூர்வ ஜன்மத்து சூக்ஷ்ம வாசனைகள் பஜனையின்போது இன்னும் உன்னைச் சூழ்ந்து கொள்கின்றன. அவைகளையும் வைராக்கியத் தீயில் பொசுக்கி விட்டாயானால் நானே வந்து உனக்கு தீக்ஷை தருவேன். நீ என்னிடம் வரத்தேவையில்லை'' என்று க்ருஷ்ணதாஸ்பாபா சொன்னார்.

லாலாபாபு பஜனையை முன்புவிட தீவிரமாக பஜனை செய்ய ஆரம்பித்தார். தீக்ஷை இல்லாவிட்டாலும் துறவியைப் போல்தான் வாழ்ந்தார். கௌபீனமும் ஒரு மேல் வஸ்திரமும் மட்டும் அணிந்து வந்தார். நாட்கள் நகர்ந்தன. தீக்ஷைக்கு வழியைக் காணோம்.

லாலாபாபு அடிக்கடி ப்ருந்தாவனம் சென்று ஸ்ரீ க்ருஷ்ணச்ந்த்ரமா கோவிலில் ப்ரசாதம் ஒழுங்காக விநியோகமாகிறதா என்று பார்த்து விட்டு வருவார். இந்த முறை பகவான் முன்பு நின்று, ''ப்ரபோ! நீ கேட்டதுபோல் இன்னும் இதயக்கோவில் அமைக்கவில்லையே! என் குரு எனக்கு இன்னும் பூர்வஜன்ம வாசனைகள் மீதமிருப்பதாகக் கூறுகிறாரே! என்ன வாசனை என்று தெரிந்தால்தானே அதை நீக்கிக் கொள்ள முடியும்! நீதான் உதவி புரிய வேண்டும்! இல்லையேல் எனக்கு வேறு கதி ஏது? நான் அழுக்குள்ளவனாகவே இருந்தால் உன் கோவில் எப்போதும் கட்டி முடியாது!'' என்று கதறினார்.

அன்று இரவு லாலாபாபுவுக்கு உறங்க முடியவில்லை. இரவு முழுவதும் அழுகையிலும் ப்ரார்த்தனையிலுமே கழித்தார். இப்படி அவர் என்றுமே அழுததில்லை. கண்ணீராலேயே தன் கறைகளைக் கழுவினார். காலையில் எழுந்தவுடன் அவருக்கு தனக்கு என்ன வாசனைகள் தீரவில்லை என்று தெளிவாகப் புரிந்துவிட்டது! ''நான் அனைத்தையும் துறந்துவிட்டேன். ஆனால் நான் துறந்து விட்டேன் என்ற கர்வத்தைத் துறக்கவில்லை. துறக்காதவர்களைவிட நான் மேலானவன் என்ற எண்ணத்தைத் துறக்கவில்லை. லக்ஷ்மி சந்திரன் என்பவனிடம் எனக்குள்ள த்வேஷத்தை மறக்கவில்லை. அதனால்தான் அவனிடம் நான் பிக்ஷைக்குப் போவதில்லை. அவனைத் தவிர்த்து வருகிறேன். இதுவே அவனிடம் எனக்குள்ள த்வேஷத்துக்கு ப்ரமாணம்'' என்று பளிச்சென்று எண்ணங்கள் வந்தன. யார் இந்த லக்ஷ்மிசந்த்ரன்?

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 100

உலகில் வேதாந்த கிரந்தங்கள், பக்தி கிரந்தங்கள், இதிஹாஸ, புராண கிரந்தங்கள் என்று அனைத்து கிரந்தங்களும் ஆத்ம தத்வங்களைச் சொல்கின்றன. வேதாந்த கிரந்தங்கள் ஆத்மதத்வங்களை நேரடியாகச் சொல்ல, இதிஹாஸ புராணங்களோ அதையே ரஸோக்தியாகச் (ரசிக்கும்படியாக) சொல்கின்றன.

உண்மையே பேசு என்று ஒருவருக்கு உபதேசம் செய்கிறோம். உபதேசம் வாங்கிக்கொண்டவருக்கு அதில் நிஷ்டை வந்தால்தான் அவர் உண்மையே பேசி வாழ்வார். அவர் ஒருக்கால் ஹரிச்சந்திரனின் கதையைக் கேட்பாரெனில், உருக்கமான அந்தக் கதையைக் கேட்டவுடன், ஹரிச்சந்திரனைப்போல் நாமும் ஸத்யவானாக இருக்க வேண்டும் என்று தோன்றிவிடுகிறது அல்லவா? இதுபோலவேதான், இதிஹாஸ புராணங்களில் தத்வங்கள் உள்ளன. நமது பெரியோர்கள் புராணங்களில் தத்வங்களை வைத்து, அதை ரஸனையுடன் கொடுத்து உள்ளனர். மனு போன்ற மஹாத்மாக்களும், அதனால், புராண உபன்யாஸம் செய்யும் பௌராணிகர்களிடம், அவர்களை புராணங்களிலுள்ள தத்வங்களை எடுத்துச் சொல்லச் சொல்கின்றனர். ஹரிச்சந்திரனின் கதையில், உண்மை பேசவேண்டுமெனும் தத்வமுள்ளது. சரித்திரத்தையும், தத்வத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. இரண்டும் சேர்ந்தே உள்ளது.

இராமாயணம், பாகவதம் நன்றாகப் படித்துத் தெரிந்து கொண்டால்தான் ராம தத்வம் என்ன, க்ருஷ்ண தத்வம் என்ன என்று விளங்கும். க்ருஷ்ணனின் சரித்திரத்தை படிக்காமல் க்ருஷ்ண தத்வம் விளங்காது. ராமாயணத்தில் ராவணனுக்கு பத்து தலை. அந்தப் பத்து தலைகளே பத்து இந்திரியங்கள். அவனருகில் விபீஷணன், இந்திரஜித், கும்பகர்ணன் எப்பொழுதும் உள்ளனர். அவர்களே ஸாத்வீக, ராஜஸ, தாமஸ குணங்கள். விபீஷணன் ஸாத்வீக குணமுள்ளவன். இந்திரஜித் ரஜோகுணம் உள்ளவன். கும்பகர்ணன்

தமோகுணம் படைத்தவன். இந்த மூவரும் ராவணனை ஒட்டி உள்ளனர். அதுபோல், ஸாத்வீக, ராஜஸ, தாமஸ குணங்கள் பத்து இந்திரியங்களை அவலம்பித்து உள்ளன. ராமாயணத்தை முழுவதும் நன்கு படித்தால்தான், ''கும்பகர்ணனின் characterஐ பார்த்தால் தமோகுணம் என்றால் என்ன என்று தெரியவரும். இந்திரஜித்தின் characterஐப் பார்த்தால் ரஜோகுணம் தெரியவரும். விபீஷணனைப் பற்றி பார்த்தால், ஸாத்வீக குணம் என்ன என்பது புரியும். ஆனால், வெறும் ஸாத்வீக, தாமஸ, ராஜஸ குணங்களென்றால் விளங்காது. சரித்திரத்தோடு பார்த்தால் தான் நன்கு புரியவரும்.

ஒரு சரித்திரத்தில் வரும் கதாநாயகன், அந்த சரித்திரத்தில் வரும் தத்துவப்படி நடந்து இருந்தால், அவனிடம் ஒரு பெருமதிப்பும், அபிமானமும் ஏற்பட்டுவிடுகிறது. அதுமாதிரி இல்லாவிடில் அச்சரித்திரங்கள் நம்மிடம் ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாது.

ஆத்மதத்துவங்களைப் பலர் உபதேசம் செய்கின்றனர். அதை கேட்டு வருவோருக்கு, ஒரு சிறிதேனும் கண்ணை மூடி தியானம் செய்ய வேண்டும் எனத் தோன்றுவதில்லை. ஒரு பொழுதுபோக்காகவே ஆத்ம தத்துவங்களைப் பலர் கேட்கின்றனர்.

ஆனால், ராமாயணம், பாகவதம் போன்றவற்றைப் படித்தாலோ ராமன் மேலும், கிருஷ்ணன் மேலும் 'பூஜ்யதா **பா**வம்' ஏற்படுகிறது. அப்படி ஏற்படுவதற்குக் காரணம் என்னவென்றால், அந்த தெய்வீக அவதாரங்கள் அந்த சரித்திரங்களில் வரும் தத்துவங்களுக்கு எடுத்துக்காட்டாகவும், ப்ரமாணமாகவும் வாழந்து காட்டி இருப்பதுதான். அதுபோல் ரமண தத்துவம் என்னவென்று பார்க்கும் பொழுது, ரமண சரித்திரத்தை விட்டு பார்க்க முடியாது. ரமணரை விட்டு, ரமண தத்துவத்தை புரிந்துகொள்ள இயலாது. ரமணர், பார்வையை உள்புறமாகத் திருப்பி ஆத்மவிசாரம் செய்யச் சொல்லி உள்ளார். 'நான் யார்' எனப் பார்க்கச் சொல்லியுள்ளார் என்று சொல்லிவிட்டு, ரமணரின் சரித்திரத்தைப் படித்து, ரமணர் யார் என்று தெரிந்துகொள்ளாமல் இருக்கலாமா என்றால், அப்படி இருக்க முடியாது. ரமண தத்வங்கள் நன்கு புரியவேண்டுமென்றால்,

ரமணரின் சரித்திரத்தை நன்கு படிக்க வேண்டும். ரமணர் சரித்திரத்துடன் ரமண தத்துவங்களைச் சேர்த்துப் பார்க்கும்பொழுது, அவருடைய உபதேசங்கள், எப்படி அவர் வாழ்க்கையில் அனுஷ்டானத்தில் (நடைமுறையில் கடைப்பிடித்தல்) இருந்தது என்று தெரியவரும்பொழுது, அவரிடம் ஒரு ப்ரேம பூர்வமான பக்தி வந்துவிடுகிறது. அந்த பக்தியே, அவர் உபதேசம் செய்த மார்க்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நமக்கு அனுபூதியில் கொண்டு வந்துவிடும். அவரிருந்த அத்வைத ஸ்திதிக்கும் கொஞ்சம், கொஞ்சமாக நம்மை அழைத்துச் செல்லும்.

பல வேதாந்த கிரந்தங்களைப் பார்த்தால், பக்தி வேண்டாம் என்று சொல்லி இருக்கும். வேதாந்திகள் தெய்வத்திடம் பக்தி வேண்டாம் என்று சொன்னாலும், அவர்கள், ஒரு சாதாரண பக்தன், அவனுடைய ஸ்வாமியிடம் வைத்திருக்கும் பக்தியைக் காட்டிலும், வேதாந்தி தங்கள் குருநாதரிடம் மேலான அன்பும், பக்தியையும் வைக்கின்றனர். வேதாந்தி, தெய்வத்தை விட்டுவிட்டு, குருவிடம் உத்தமமான பக்தியை வைக்கிறான். குரு செய்த உபதேசம் விளங்கும். அவர் உபதேசம் செய்த மார்க்கம் பிடிபடும். குருவிடம் பக்தி இல்லாவிடில், குருவின் மார்க்கம் ஒருக்காலும் விளங்காது.

(தொடரும்)

HUMBLE PRANAMS
TO
H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI

*For Photography / Video Coverage of all Festive Occasions / Functions*

*Please Contact :*
**G.M.K. RAJHA MOHAN,** D.F. Tech
"Raja Photography"
51/L, Bharathidasan Colony,
K.K. Nagar, Chennai - 78
Mobile : 9840279485

# செய்திகள்

**பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் ஜயந்தி மஹோத்ஸவம்,**
**இடம் : ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை.**
**நவம்பர் 29, 30, டிசம்பர் 1-ந் தேதிகள்**

நவம்பர் 29-ந் தேதி முதல் டிசம்பர் 1-ந் தேதி வரை நமது ஸாந்தீபனி குருகுல வித்யார்த்திகளின் வேதபாராயணம் நடைபெற்றது. ஸ்ரீ P.K. சுப்ரமணியம் அவர்கள் 'சுந்தரகாண்டம்' பாராயணம் செய்தார்கள். நவம்பர் 30-ந் தேதி காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம் நடைபெற்றது.

**டிசம்பர் 1-ந் தேதி— பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் ஜயந்தி**

கொளத்தூர் ஸ்ரீ ராகவாஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம் நடைபெற்றது.

**டிசம்பர் 2-ந் தேதி**

வேலூர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசம் செய்தார்கள்.

**டிசம்பர் 4-ந் தேதி - ஏகாதசி**

மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம், பூஜை நடைபெற்றது.

**டிசம்பர் 5-ந் தேதி**

திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணி திட்டத்தின் கீழ் இரண்டாவது கோயிலாக, மயிலாடுதுறை வட்டம், தேரழுந்தூர் அருகில் மருத்தூர் கிராமம், ஆதி திராவிடர் குடியிருப்பிலுள்ள ஸ்ரீ மஹாமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. அங்கு ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் பஜனை மடம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**டிசம்பர் 6-ந் தேதி, 7-ந் தேதி**

சென்னை, மந்தைவெளி, ஸ்ரீ குப்புஸ்வாமி - ஸ்ரீமதி பத்மினி குப்புஸ்வாமி தம்பதியினர் க்ருஹத்தில் நடைபெற்ற அஷ்டபதி பஜனை, திவ்யநாம ஸங்கீர்த்தனம், ராதா கல்யாணம் வைபவங்களில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

**டிசம்பர் 8-ந் தேதி - விஷ்ணு தீபம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் திவ்யநாமபஜனை நடைபெற்றது.

**டிசம்பர் 10-ந் தேதி**

கோயம்புத்தூர் ராம்நகரில், ''அபிநவ வித்யாதீர்த்தர் ப்ரவசன மண்டபத்தை'' ஸ்ரீ ஸ்வாமிஜி திறந்து வைத்தார்கள்.

**டிசம்பர் 13, 14-ந் தேதிகள்**

தஞ்சை, நீடாமங்கலம் அருகிலுள்ள பெரம்பூரில் நடைபெற்ற ராதாகல்யாண வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

**டிசம்பர் 16-ந் தேதி முதல்**

சென்னை ப்ரேமிகபவனத்திலும், மதுரபுரி ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலிலும் தனுர்மாத பூஜை நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

**டிசம்பர் 16-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் அத்யயனோத்ஸவம் நடைபெற்றது.

**டிசம்பர் 19-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களால் ''ஸ்ரீமத் ராமாயணம்'' ப்ரவசனம் நடைபெற்றது.

**டிசம்பர் 22-ந் தேதி**

கல்பாக்கம் ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**டிசம்பர் 25-ந் தேதி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலை 12 மணியளவில் அத்யயனோத்ஸவ பூர்த்தியும் ஆண்டாள் கல்யாணமும் நடைபெற்றது.

மாலை 7 மணிக்கு ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களின் ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் பூர்த்தி நடைபெற்றது.

ஶ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி தெய்வீக மாத இதழ் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சந்தாதாரர்கள் மதுரமுரளிக்கான சந்தாவை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelope மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2003121234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும். அதாவது 200312 என்பது டிசம்பர் 2003 உடன் சந்தா முடிவடைந்து உள்ளது என்பதாகும். அவர்கள் உடனே சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். கடைசீ 4 எண்கள் ''1234'' என்பது அவருடைய சந்தா எண். இதே போல் அவரவர்களுக்கான சந்தா எண்ணை குறித்துக்கொள்ளவும்.

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஶ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

சந்தா எண் இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும். மாதத்தின் 2-ந் தேதிக்குப் பிறகு வரும் புதிய சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதம் முதல் தான் மதுரமுரளி அனுப்பமுடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
contact@madhuramurali.org

# ஒரு முக்கிய அறிவிப்பு!

வேதம்தான் உலகில் எல்லா தர்மங்களுக்கும் மூலம். வேதம்தான் முதன்முதலாகத் தோன்றியது. ஆகவே, முதன்முதலில் பகவான் மந்திரமூர்த்தியாகத்தான் இருந்தான். பிறகுதான் பகவானுடைய அவதாரங்கள் ஏற்பட்டன. அவதாரங்கள் ஏற்பட்டதனால்தான் திவ்யதேசங்கள் ஏற்பட்டன. இந்த திவ்யதேசங்களில் எழுந்தருளி இருக்கும் பெருமாளைக் கீர்த்தனம் செய்வதற்காகத்தான் ஆழ்வார்களின் அவதாரங்கள் ஏற்பட்டன.

இதே ரீதியில்தான் நம்முடைய ஸ்தாபனங்களில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது 'ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம்' என்ற நமது வேதபாடசாலை. இதில் இன்று சுமார் எழுபத்தைந்து வித்யார்த்திகள் க்ருஷ்ண யஜுர் வேதம் மற்றும் ஸாம வேதம் படித்து வருகின்றார்கள். அவ்வப்பொழுது ஸபைகள் நடத்தப்பட்டு வேத வித்வான்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அடுத்ததாக முதன்முதலாக சீர்காழியை அடுத்துள்ள திருநாங்கூர் திவ்யதேசங்களில் 'அரிமேய விண்ணகரம்' என்ற திவ்ய தேசத்திற்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதை அடுத்து குறுகிய காலத்திற்குள் எண்ணற்ற ஆலயங்கள் திருப்பணி செய்யப்பட்டு, கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டுவிட்டன. மேலும், பல திருப்பணிகள் நடந்து வருகின்றன. மேலே கூறிய வேத ஸம்ரக்ஷணமும், ஆலய திருப்பணிகளும் பலரால் நடத்தப்பட்டு வருகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் தமிழ்நாடு முழுவதும், அதிலும் கிராமங்களில், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில், 'ஹரே ராம...' மஹாமந்திர கீர்த்தனம் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் ஆர்வத்துடன் வரவேற்கின்றார்கள். பல இடங்களில், மக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் இல்லங்களிலும், பொது இடங்களிலும், ''ஹரே ராம...'' நாம கீர்த்தனம் செய்து

வருகின்றார்கள். இங்கெல்லாம் செல்லும் பொழுது, மக்கள், ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் செய்து வருவதால் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நன்மைகளையும், தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பொழுது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் இந்த மஹாமந்திர கீர்த்தனத்தை முன் நின்று நடத்தி வருகின்றவர்களுக்கும், ஒவ்வொரு ஞாயிறன்றும், தங்கள் வீடுகளில் மஹாமந்திர கீர்த்தனம் செய்பவர்களுக்கும் நம் ஸ்வாமிஜி தன் கைகளினாலேயே பிரசாதம் கொடுக்க ஆசைப்படுகின்றார்கள்.

நம்முடைய ஆஸ்ரம வளாகத்தில் கோயில் கொண்டுள்ள **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாளின் இரண்டாவது பிரதிஷ்டா தினம்,** அதாவது ''வஸந்த பஞ்சமி'' இந்த வருடம் **ஜனவரி மாதம் 26-ம் தேதி** வருகின்றது. அன்று குடியரசு தினமாகவும் இருப்பதால் எல்லோருக்கும் விடுமுறைநாள். அன்று எல்லோரும் ஆஸ்ரமத்திற்கு வந்தால் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் கைகளினால் பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம். இந்த வருடத்தில் எந்தெந்த இடங்களில் எல்லாம் அப்படி நாமகீர்த்தனம் நடைபெற்றுவருகின்றதோ, அந்த கிராமங்களுக்கு எல்லாம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி நேரில் விஜயம் செய்து அங்கு எல்லோருக்கும் அனுக்ரஹம் செய்ய உள்ளார்கள்.

— **Dr. A. BHAGYANATHAN**
Personal Secretary to
H.H. Sri Sri Muralidara Swamiji

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் ப்ரதிஷ்டாதினம்

| | | |
|---|---|---|
| **தேதி** | : | **26.1.2004 – வஸந்தபஞ்சமி** |
| காலை 8.00 | : | விசேஷ திருமஞ்சனம் |
| மாலை 6.00 | : | ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம் |
| இரவு 9.00 | : | திவ்யநாமஸங்கீர்த்தனம் |

**மங்களானி பவந்து**